

நாவல் : ஹக்கில்பெர்ரிஃபின்னின் சாகசங்கள் (டாம் சாயரின் தோழன்) - 33

Written by - ஆங்கில மூலம் : மார்க் ட்வைன் | தமிழில் : முனைவர் ர.தாரணி -
Friday, 22 May 2020 11:32 - Last Updated Saturday, 23 May 2020 20:51

என் பால்ய ,பதின்ம வயதுகளில் மேனாட்டு நாவலாசிரியர்களின் நாவல்கள் பலவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புகளை நான் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்திலிருந்து இரவல் பெற்று வாசித்துள்ளேன். அவற்றில் என்னை மிகவும் கவர்ந்த நாவல்களாக மார்க் ட்வைனின் 'ஹக்கில்பெர்ரி ஃபின்னின் சாகசங்கள்', ரொபர்ட் லூயி ஸ்டீவன்சனின் 'புதையல் தீவு' என்பவற்றைக் குறிப்பிடுவேன். பின்னர் வளர்ந்ததும் ஹக்கில்பெர்ரி ஃபின்னின் சாகசங்கள் நாவலின் ஆங்கில; நூலினையும் வாசித்துள்ளேன். அண்மையில் முனைவர் ர.தாரணி 'பதிவுகள்' இணைய இதழுக்கு மார்க் ட்வைனின் சிறுகதையொன்றினைத் தமிழாக்கம் செய்து அனுப்பியபோது அவர் தமிழாக்கம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. உடனேயே ஓரு யோசனையும் தோன்றியது. அவரிடம் ஏன் அவர் 'ஹக்கில்பெர்ரி ஃபின்னின் சாகசங்கள்' நாவலைத் தமிழாக்கம் செய்யக் கூடாது என்று கேட்டிருந்தேன். அதற்கு அவர் உடனடியாகவே மகிழ்ச்சியுடன் சம்மதித்தார். உடனேயே அத்தியாயங்கள் சிலவற்றையும் தமிழில் எழுதி அனுப்பியிருந்தார். அவருக்குப் 'பதிவுகள்' சார்பில் நன்றி. இந்நாவல் இனி பதிவுகளில் தொடராக வெளிவரும். வாசித்து மகிழுங்கள். உங்கள் கருத்துகளையும் அறியத்தாருங்கள். - வ.ந.கிரிதரன், ஆசிரியர் 'பதிவுகள்'

1 / 6

நாவல் : ஹக்கில்பெர்ரிஃபின்னின் சாகசங்கள் (டாம் சாயரின் தோழன்) - 33

Written by - ஆங்கில மூலம் : மார்க் ட்வைன் | தமிழில் : முனைவர் ர.தாரணி -
Friday, 22 May 2020 11:32 - Last Updated Saturday, 23 May 2020 20:51

அத்தியாயம் முப்பத்தி மூன்று

இவ்வாறாக முடிவு கட்டிய நான், குதிரை இழுத்துச் செல்லும் பாரவண்டியில் ஏறி ஊரை நோக்கிச் சென்றேன். பாதிதூரம் செல்லும்போதே, எனக்கு எதிரே ஓரு பாரவண்டி வருவதைக் கண்டேன். கண்டிப்பாக அது டாம் சாயர்தான். அவன் என் அருகே வரும்வரைக் காத்திருந்து பின்னர் கூறினேன், "நிறுத்துங்கள்" என்று. வண்டி என்னருகே நின்றது. என்னைக் கண்டதும் டாம் சாயரின் வாய் ட்ரங்க் பெட்டியின் மூடி போலப் பிளந்து அப்படியே நின்றும் விட்டது. தொண்டை வறண்டு போனவன் போல இரண்டு மூன்று முறை சிரமப்பட்டு எச்சிலை விழுங்கி விட்டு பின்னர் கூறினான்:

"உன்னைக் காயப்படுத்தும் எந்த விஷயமும் நான் உனக்குச் செய்ததில்லையே. அது உனக்கே தெரியும். எனவே ஏன் நீ இப்படித் திரும்ப வந்து என்னை இவ்வாறு பயமுறுத்துகிறாய்?"

"நான் திரும்ப வரவில்லை. உண்மையில் நான் போகவே இல்லை." நான் கூறினேன்.

எனது குரல் கேட்டு அவனது மண்டை கொஞ்சம் தெளிந்தது போலத் தோன்றியது. ஆயினும் அவன் முழுமையாகத் திருப்தி அடையவில்லை.

"என்னை முட்டாளாக்க முயற்சிக்காதே. உனக்கு நீயே அப்படிச் செய்வாயா என்ன? உண்மையில் நீ ---- நீ ஓரு பேய் அல்லவே?"

2 / 6

நாவல் : ஹக்கில்பெர்ரிஃபின்னின் சாகசங்கள் (டாம் சாயரின் தோழன்) - 33

Written by - ஆங்கில மூலம் : மார்க் ட்வைன் | தமிழில் : முனைவர் ர.தாரணி -
Friday, 22 May 2020 11:32 - Last Updated Saturday, 23 May 2020 20:51

"சத்தியமாக நான் பேய் அல்ல." நான் கூறினேன்.

"நல்லது. நான் ....நான் ....நல்லது. இது கொஞ்சம் சமாதானப்படுத்துகிறது. ஆனால் என்னால் எதுவும் புரிந்து கொள்ள முடியவில்லை. இங்கே பார். நீ கொலை செய்யப்படவில்லையா?"

"இல்லை. நான் கொலை செய்யப்படவில்லை. அது எல்லாமே மற்றவர்களை நம்ப வைக்க நான் நடத்திய நாடகம். இன்னும் நீ நம்பவில்லையென்றால், இங்கே அருகில் வந்து என் சருமத்தைத் தொட்டுப் பார்."

அப்படியே அவன் செய்தான். அது அவனைத் திருப்திப்படுத்தியது. என்னை மீண்டும் சந்தித்த ஆனந்தத்தில் அவனுக்குத் தலைகால் புரியாமல் போய் விட்டது. நடந்த அனைத்து விஷயங்களையும் அவன் அந்த நிமிடமே தெரிந்து கொள்ள விரும்பினான். ஏனெனில் எனக்கு நடந்த விஷயங்கள் அனைத்தும் அவன் மிகவும் விரும்பும் மர்மமும், மாபெரும் சாகசங்களும் நிறைந்திருப்பதால் அதை கேட்டுத் தெரிந்துகொள்ளத் துடித்தான். ஆனால், அவனை சிறிது நேரம் பொறுமையாகக் காத்திருக்கும்படி கூறினேன். அவனின் வண்டியை ஓட்டி வந்த ஓட்டுனரை சிறிது நேரம் காத்திருக்கச் சொல்லிவிட்டு என்னுடைய வண்டியில் நானும் டாமும் கொஞ்ச தூரத்திற்கு ஒரு சவாரி போனோம். நான் சிக்கி இருக்கும் பிரச்னை பற்றிக் கூறி இதற்கு என்ன தீர்வு என்று அவனிடம் அறிவுரை கேட்டேன். ஒரு நிமிடம் தொந்தரவு செய்யாது தனித்து விடும்படி அவன் கூறினான். பின்னர் யோசித்தான், யோசித்தான், யோசித்துக் கொண்டே இருந்தான். விரைவில் அவன் இவ்வாறு கூறினான்:

"ஓகே. எனக்கு யோசனை கிடைத்து விட்டது. என்னுடைய பெட்டியை எடுத்து உன்னுடைய வண்டியில் ஏற்றிக் கொள். அது உன்னுடையது என்று கூறிக் கொள். அப்படியே வண்டியைத் திருப்பி மெதுவாக ஓட்டிச் சென்று நீ அடைய வேண்டிய நேரத்திற்கு வீடு சென்று சேர்ந்து கொள். நான் திரும்ப ஊருக்குள் செல்கிறேன். பின் அங்கிருந்து மீண்டும் பயணப்பட்டு நீ வீடு சேர்ந்த கால் மணி அல்லது அரை மணி நேரத்திற்கும் பிறகு நான் வந்து சேர்கிறேன். என்னைப் பார்த்ததாகக் காட்டிக் கொள்ளாதே."

"எல்லாம் சரி. ஆனால் ஒரு நிமிடம் நில்லு. யாருக்கும் தெரியாத, எனக்கு மட்டுமே தெரிந்த இன்னொரு ரகசியம் கேள். அங்கே ஒரு நீக்ரோ இருக்கிறான். அவனை அடிமைத்தனத்திலிருந்து திருடிவிட நான் முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். அவன் பெயர் ஜிம். அவன் முதிய மிஸ். வாட்ஸனின் அடிமை ஜிம்" நான் கூறினேன்.

"ஹாங்! ஆனால், ஜிம் வந்து ...." அவன் இழுத்தான். அப்படியே நிறுத்திவிட்டு மீண்டும் யோசிக்கத் தொடங்கினான்.

"நீ என்ன சொல்லப் போகிறாய் என்று எனக்குத் தெரியும். அவனை அப்படித்

3 / 6

நாவல் : ஹக்கில்பெர்ரிஃபின்னின் சாகசங்கள் (டாம் சாயரின் தோழன்) - 33

Written by - ஆங்கில மூலம் : மார்க் ட்வைன் | தமிழில் : முனைவர் ர.தாரணி -
Friday, 22 May 2020 11:32 - Last Updated Saturday, 23 May 2020 20:51

திருடுவது மிகவும் ஈனத்தனமான, கேவலமான செயல் என்று கூறப் போகிறாய். அவ்வாறு இருந்தால்தான் என்ன? நானே இழிசெயல் செய்பவன்தான். எனவே அவனை நான் திருடத்தான் போகிறேன். நீ இது பற்றி யாரிடமும் கூறக்கூடாது அல்லது தெரிந்தது போலவும் காட்டிக் கொள்ளக் கூடாது. சரியா?"

அவனின் கண்கள் ஒரு கணம் பிரகாசமடைந்தது. "அவனைத் திருட நான் உனக்கு உதவி செய்கிறேன்." அவன் கூறினான்.

யாரோ என்னைத் துப்பாக்கிக் குண்டுகளால் சுட்டு வீழ்த்தியதை போல கடும் அதிர்ச்சியடைந்தேன். இப்படிப்பட்ட திடுக்கிடும் விஷயத்தை என் வாழ்வில் நான் என்றுமே கேட்டதில்லை. அவன் சொல்லியதைக் கேட்டபின், டாம் சாயரின் மீது எனக்கிருந்த மரியாதை கடகடவென கீழே சரிந்தது என்றுதான் நான் சொல்லவேண்டும். அதை சுத்தமாக என்னால் நம்பவே முடியவில்லை. டாம் சாயர் - ஒரு நீக்ரோ திருடன்?!

"இருக்கவே முடியாது" நான் சொன்னேன், “நீ கேலி செய்கிறாய்."

"இல்லை. நான் கேலி செய்யவில்லை."

"அப்படியானால் நல்லது" நான் கூறினேன், “கேலியோ, உண்மையோ, தப்பி ஓடி வந்த நீக்ரோ பற்றி ஏதேனும் நீ கேள்விப்பட்டால், நீயோ அல்லது நானோ இருவருமே அவனைப் பற்றி ஒன்றும் தெரியாதமாதிரி நடந்து கொள்ளவேண்டும் என்பதை நீ நினைவில் கொள்."

அவனின் ட்ரங்க் பெட்டியை எடுத்து என்னுடைய வண்டியில் நான் வைத்துக் கொண்டேன். பின்னர், அவன் அவன் வழியில் சென்றான். நான் என் வழியில் சென்றேன். உண்மையில் கொஞ்சம் மெதுவாகப் போய் சேர்வதுதான் சரியாக இருக்கும் என்பதை மறந்து, மிகுந்த சந்தோசத்தாலும், நினைவுகளுக்குள்ளே மூழ்கிப் போனதாலும் வேகமாகச் சென்று விட்டேன். ஊருக்குள் போய் திரும்பி வரும் ஒரு பயணத்திற்கு எடுக்கும் நேரத்தை விடக் குறைவான நேரத்திலேயே நான் வீடு போய் சேர்ந்து விட்டேன். கதவினருகே காத்திருந்த அந்த முதிய கனவான் கூறினார்:

"இது மிகவும் பெரிய விஷயம். இந்த கிழட்டுக் குதிரை இத்தனை விரைவாக இந்தப் பயணம் செய்தது என்று யாரேனும் நினைக்கவே முடியாதுதான். அவளுக்குச் சரியான நேரத்தை நான் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும். அவள் கொஞ்சம் கூட வியர்வை சிந்தவேயில்லை - ஒரு துளி கூட. ஆஹா! அருமை! ஏன், இந்தக் குதிரையை நான் விற்கவே போவதில்லை - இப்போது -அது நூறு டாலர் பணமாக இருந்தாலும் சரி. உண்மையாக நான் மாட்டேன். இந்தப் பயணத்திற்கு முன்பாக இருந்திருந்தால், ஒரு பதினைந்து டாலருக்குத்தான் அவளை விற்றிருப்பேன். அவ்வளவுதான் அவள் மதிப்பு என்று நான் எண்ணியிருந்தேன்."

4 / 6

நாவல் : ஹக்கில்பெர்ரிஃபின்னின் சாகசங்கள் (டாம் சாயரின் தோழன்) - 33

Written by - ஆங்கில மூலம் : மார்க் ட்வைன் | தமிழில் : முனைவர் ர.தாரணி -
Friday, 22 May 2020 11:32 - Last Updated Saturday, 23 May 2020 20:51

5 / 6

நாவல் : ஹக்கில்பெர்ரிஃபின்னின் சாகசங்கள் (டாம் சாயரின் தோழன்) - 33

Written by - ஆங்கில மூலம் : மார்க் ட்வைன் | தமிழில் : முனைவர் ர.தாரணி -
Friday, 22 May 2020 11:32 - Last Updated Saturday, 23 May 2020 20:51

[illegible]

[illegible]

6 / 6